# 12

# ஈசன் உவக்கும் இன்மலர்

ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று என்னும் பாடலை சுவாமி விபுலானந்தர் இயற்றியுள்ளார். இவர் மட்டக்களப்பில் காரைதீவில் பிறந்தவர். இவரது இளமைப் பெயர் மயில்வாகனன். இவர் முத்தமிழ் வித்தகராகத் திகழ்ந்தவர். யாழ் நூல் இவருக்குப் புகழ் சேர்த்துத் தந்துள்ளது. வினாவிடை முறையில் இப்பாடலைப் பாடியுள்ளார்.

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறப் பூவும் அல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலம் அடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த மாமலரோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?
காப்பவிழ்ந்த மலரும் அல்ல கழுநீர்த்தொடையும் அல்ல
கூப்பியகைக் காந்தள் அடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் கொன்றையோ பாரில் இல்லாக் கற்பகமோ
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?
பாட்டளிசேர் கொன்றை அல்ல பாரில் இல்லாப் பூவும் அல்ல
நாட்டவிழி நெய்தல் அடி நாயகனார் வேண்டுவது.

### அரும்பதங்கள்

வள்ளல்- கேட்டவர்களுக்கு இல்லையென்று கூறாமல் கேட்டபொருள் தருபவர்

கமலம் - தாமரை

உத்தமனார் - சிறந்த குணங்கள் உடையவர்

காப்பு - பாதுகாவல், தெய்வ வணக்கம், வளையல்

மாமலர் - சரக்கொன்றை (சரஞ்சரமாகப் பூக்கும் கொன்றை மரம்)

கழுநீர் - அரிசியைக் கழுவி அல்லது கொதிக்கவைத்து வடித்த நீர்

காந்தள் - கார்த்திகைப்பூ

கற்பகம் - தேவலோகத்து ஐந்து தருக்களுள் ஒன்று. வேண்டியதையெல்லாம் தரும் மரம்.

### கிரகித்தல் பயிற்சி

1. "ஈசன் உவக்கும் இன்மலர்" என்னும் தொடர் குறிப்பிடும் பொருளை விளக்குக.
2. இப்பாடற் பரப்பிலே குறிப்பிடப்படும் இறைவனைக் குறிக்கும் சொற்கள் எவை?
3. இறைவனது அடிக்கு இணையான மலர் எதுவென கவிஞர் குறிப்பிடுகின்றார்?
4. "கூப்பிய கைக்காந்தள்" என்பதன்மூலம் கவிஞர் குறிப்பிட விரும்பியது என்ன?
5. இப்பாடல் எத்தகைய அமைப்பில் இடம்பெற்றுள்ளது.
6. இப்பாடலில் இடம்பெறும் அணி என்ன?
7. இறைவனைக் குறிக்கும் தொடர்களில் இருந்து அவரது அருள் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகின்றது?
8. இப்பாடலைப் படித்து முடித்ததும் உமது மனதிலே எழுந்த உணர்வுகள் எத்தகையது?
9. பொருள் எழுதுக:
   அ.வள்ளல் ஆ. கமலம் இ. தொடை ஈ. பார் உ. விழி
10. எத்தகைய வாக்கியம் என எழுதுக:
    அ. வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?
    ஆ. நாட்டவிழி நெய்தல் அடி நாயகனார் வேண்டுவது.

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

இதுபோன்ற கவிதைகளைப் படித்து உமக்குப் பிடித்த தலைப்பில் கவிதையாக்குக.

# உவமைத் தொடர்கள்

நன்கு தெரிந்த ஒருபொருளின் இயல்பை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவது உவமையணி. அத்தகைய உவமையை உள்ளடக்கிய தொடரே உவமைத்தொடர்.

★ இலைமறை காய்போல - மறைவான நிலை
★ ஊமை கண்ட கனவு போல - கூற முடியாத நிலையிலிருத்தல்
★ கடன் பட்டார் நெஞ்சம் போல - மனக் கலக்கம் அடைதல்
★ ஓடும் புளியம் பழமும் போல - ஒட்டுறவின்றி இணைந்திருத்தல்
★ கனியிருக்கக் காய் கவருவது போல - நன்மை வெறுப்பும் தீமை விருப்பும்
★ வாடும் பயிருக்கு வான்மழை போல - துன்பத்தில் அபயம்
★ தலையிருக்க வால் ஆடுவது போல - உரியவரை மீறிச் சார்ந்திருப்பவர் முந்நிற்பது
★ புதையல் காத்த பூதம் போல - பயன்பெறாப் பாதுகாப்பு
★ சிவபூசையில் கரடி புகுந்தது போல - நன்மைக்கு இடையூறு

**பயிற்சி**

**அ** பகுதியை **ஆ** பகுதியுடன் தொடர்பு படுத்துக:

| **அ** | **ஆ** |
|---|---|
| வைக்கோல் பட்டடை நாய் போல | தெட்டத் தெளிவு |
| வெள்ளிடை மலை போல | செயலற்ற நிலை |
| சித்திரப் பதுமை போல | பலன்பெறாபாதுகாப்பு |
| சூரியனைக் கண்ட பனி போல | பகிரங்க மதிப்பு |
| குன்றின் மேலிட்ட தீபம் போல | உடன்மறைவு |

**செயற்பாடு**

தாங்கள் கண்டறிந்த உவமைத் தொடர்கள் பத்தை இனங்கண்டு, அவற்றுக்கான விளக்கத்தினை எழுதுக.